# தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்

## தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் LCO எண் பெற்றுள்ள உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்கள் மற்றும் தனியார் உள்ளூர் சேனல் (PLC) உரிமையாளர்களின் கவனத்திற்கு.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் டிஜிட்டல் சேவையை விரைவில் துவங்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. இந்நிலையில், சந்தாதாரர்களுக்கு வழங்கப்படும் சேவையின் தரம் குறித்தும், நுகர்வோர் பாதுகாப்பு குறித்தும் சில வழிமுறைகளை இந்நிறுவனம் கடைபிடிக்க வேண்டும். மேலும், சந்தாதாரர்கள் தெரிந்துகொள்வதற்காக சில தகவல்கள் இந்நிறுவனத்தின் வலைதளத்தில் வெளியிடப்படவேண்டும்.

சந்தாதாரர்களுக்கு தேவையான விவரங்களை தெரிவிப்பதற்காகவும், சந்தாதாரர்களின் விவரங்களை சேகரிப்பதற்காகவும் நுகர்வோர் விண்ணப்பப் படிவம் (Consumer Application Form – CAF), நுகர்வோர் சாசனம் (Consumer Charter), நடைமுறைக் குறிப்பு (Manual of Practice), உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்களுக்கு செட்டாப் பாக்ஸ் வழங்குவதற்கான ஒப்பந்தம் (Agreement for Provisioning of Set Top Boxes to LCOs), உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்களுக்கு டிஜிட்டல் சிக்னல் வழங்குவதற்கான ஒப்பந்தம் (Interconnect Agreement), தனியார் உள்ளூர் சேனல்களை டிஜிட்டல் முறையில் ஒளிபரப்புவதற்கான வழிகாட்டுதல்கள் (Guidelines for Insertion of PLC Channels) ஆகியவை இந்நிறுவனத்தின் வலைதளத்தில் www.tactv.in முகப்பு பக்கத்தில் "அறிவிப்புகள்" "(Notification)" என்ற தலைப்பின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

இவை அனைத்தும் **வரைவு குறிப்புகளாகும்** (Drafts). எனவே, உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்கள் மற்றும் தனியார் உள்ளூர் சேனல்களின் உரிமையாளர்கள் இந்த வரைவு குறிப்புகளின் மீது ஏதேனும் திருத்தங்களோ அல்லது மாற்றங்களோ செய்ய வேண்டும் என்று கருதினால் அதனை இந்நிறுவனத்தின் மின்னஞ்சல் முகவரிக்கு tactv@tactv.in மின்னஞ்சல் வாயிலாகவோ அல்லது கடிதம் வாயிலாகவோ 25.7.2017 முதல் 7.8.2017 வரை தெரிவிக்கலாம்.

**மேலாண்மை இயக்குநர்**

## தனியார் உள்ளூர் சேனல்

# (Private Local Channel – PLC)

தமிழகத்தில் சென்னை மாநகர் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் தனியார் உள்ளூர் சேனல்கள் ஒளிபரப்பப்படுகின்றன. இச்சேனல்களில் அந்தந்தப் பகுதிகளில் நடைபெறும் நிகழ்வுகளும், இசை, கல்வி, கலை மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுகின்றன. அப்பகுதிகளில் இல்லங்களில் நடைபெறும் ஒரு சில சுப நிகழ்ச்சிகள் நேரடியாகவும் ஒளிபரப்பப்படுகின்றன.

தற்பொழுது அனலாக் ஒளிபரப்பு நடைமுறையில் தனியார் உள்ளூர் சேனல்களின் உரிமையாளர்கள் தங்கள் ஒளிபரப்புத் தொகுப்பினை தங்களின் சர்வர், டிவிடி, யு எஸ் பி போன்றவற்றிலிருந்து ஒருங்கினைத்து பேஸ்பேண்ட் சிக்னலை ஆப்டிகல் சிக்னலாக மாற்றி ஃபைபர் கேபிள் வழியாக மாவட்ட / வட்ட கேபிள் ஆபரேட்டர்களின் கட்டுப்பாட்டு அறைக்கு அனுப்புகின்றனர்.

இவ்வாறு பெறப்படும் சிக்னலை, மாவட்ட / வட்ட கேபிள் ஆபரேட்டர்கள் அதனை திரும்பவும் பேஸ்பேண்ட் சிக்னலாக மாற்றி, பல்வேறு தனியார் உள்ளூர் சேனல்களின் சிக்னல்களை ஒருங்கிணைத்து, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் சிக்னலோடு சேர்த்து சந்தாதாரர்களுக்கு வழங்கி வருகின்றனர்.

ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு எந்தெந்த தனியார் உள்ளூர் சேனல்கள் ஒளிபரப்ப வேண்டும் என்று வரையருக்கப்பட்டுள்ளது. வரையருக்கப்படாத சேனல் ஏதும் ஒளிபரப்பப்பட்டால் அதனை டிராப்பர் மூலம் நீக்கிவிட்டு, அந்த பகுதிக்கு வரையருக்கப்பட்டுள்ள சேனல் சேர்க்கப்பட்டு ஒளிபரப்பப்படுகின்றன. மேலும், தனியார் உள்ளூர் சேனல்களின் உரிமையாளர்கள் தங்களின் சிக்னல்களை மாவட்ட / வட்ட கேபிள் ஆபரேட்டர்களின் கட்டுப்பாட்டு அறைக்கு ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து ஒருங்கிணைத்து அனுப்புகின்றனர். கட்டுப்பாட்டு அறைக்கு சிக்னல் அனுப்புவதற்காக ஃபைபர் கேபிள் அமைத்துள்ளனர்.

தனியார் உள்ளூர் சேனல்கள் அனைத்தும் அனலாக் சிக்னலில் வழங்கப்படும் இலவசச் சேனல்கள் ஆகும்.

தற்பொழுது அனலாக் ஒளிபரப்பில் கட்டண சேனல்கள், இலவச சேனல்கள் மற்றும் தனியார் உள்ளூர் சேனல்கள் ஆகியவை ஒளிபரப்பப்படுகிறது.

**தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு டிஜிட்டல் உரிமம்**

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு மத்திய அரசின் தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் 17.4.2017 அன்று டிஜிட்டல் (DAS) உரிமம் வழங்கி ஆணையிட்டது. அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், டிஜிட்டல் கேபிள் டிவி சேவையை துவங்குவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள கட்டுப்பாட்டு அறையிலிருந்து தமிழகம் முழுவதும் டிஜிட்டல் சிக்னல் வழங்கும் வகையில் தொழில்நுட்பம் MPEG 2 -லிருந்து MPEG 4 ஆக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. மேலும், CAS மற்றும் SMS வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள 31 மாவட்டங்களுக்கும் டிஜிட்டல் சிக்னல் எடுத்து செல்வதற்கு பி.எஸ்.என்.எல் மற்றும் ரெயில்டெல் நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு சிக்னல் சோதனை நடைபெற்று வருகிறது.

70 லட்சம் சந்தாதாரர்களுக்கும் வழங்கும் வகையில் SD மற்றும் HD செட்டாப் பாக்ஸ் கொள்முதல் செய்வதற்கு உலகளாவிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, இந்த வாரத்தில் கொள்முதல் ஆணை வழங்கப்படவுள்ளது.

DAS உரிமத்தில் வரையருக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படி அனைத்து சேனல்களும் டிஜிட்டலாக மாற்றப்பட்டு, Scramble செய்து அனுப்பப்படும். இந்த சேனல்களை செட்டாப் பாக்ஸ் பயன்படுத்தி மட்டுமே பார்க்க இயலும்.

தனியார் உள்ளூர் சேனல்களையும் டிஜிட்டல் சிக்னலாக மாற்றி வழங்குவதற்கு தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் பணிகளை மேற்கொள்ளவுள்ளது. Encoder மற்றும் EDGE QAM ஆகியவற்றை பயன்படுத்தி டிஜிட்டல் சிக்னலாக மாற்றி வழங்கலாம் என்று இந்நிறுவனம் கருதுகிறது.

இதற்காக குறிப்பிட்ட பி.எஸ்.என்.எல் மற்றும் ரெயில்டெல் நிறுவனங்களின் Drop உள்ள இடங்களில், தனியார் உள்ளூர் சேனல்களை டிஜிட்டல் சிக்னலாக மாற்றியமைக்கும் சாதனங்களை இந்நிறுவனம் வாங்கி பொருத்தலாம் என்று கருதுகிறது.

எனினும், தனியார் உள்ளூர் சேனல் உரிமையாளர்களின் கருத்துகளை கேட்டு இதனை செயல்படுத்தலாம் என்று இந்நிறுவனம் கருகிறது.

தனியார் உள்ளூர் சேனல்களை டிஜிட்டல் சேனலாக மாற்றி வழங்குவதற்கான முறை

1. தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் குறிப்பிடும் இடத்தில் அதாவது Clean feed Drop உள்ள இடங்களில் அனைத்து தனியார் உள்ளூர் சேனல்களும் டிஜிட்டல் சிக்னலாக மாற்றியமைக்கப்படும்.

2. மாற்றியமைக்கப்பட்ட டிஜிட்டல் சிக்னல் Scrambler பயன்படுத்தி Scramble செய்யப்படும்.

3. Scramble செய்யப்பட்ட PLC சிக்னல் EDGE QAM பயன்படுத்தி தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் Clean feed சிக்னலுடன் இணைக்கப்படும்.

4. EDGE QAM-லிருந்து பெறப்படும் சிக்னல் Optical Transmitter வழியாக உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்களுக்கு வழங்கப்படும்.

5. தனியார் உள்ளூர் சேனல்களின் உரிமையாளர்களின் வசதிக்காக, PLC சிக்னலை டிஜிட்டல் சிக்னலாக மாற்றி SCRAMBLE செய்யும் வசதிகளை, இந்நிறுவனம் ஏற்படுத்தித்தரும்.

6. PLC உரிமையாளர்கள் தங்களது சிக்னல்களை, இந்நிறுவனம் தெரிவிக்கின்ற இடத்திற்கு தற்பொழுது வழங்குவதுபோல் ஃபைபர் கேபிளில் வழங்க வேண்டும்.

7. PLC சிக்னல்கள் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சியாகவோ அல்லது நேரடி ஒளிபரப்பாகவோ இருக்கலாம்.

8. அனலாக் முறையில் இருந்ததது போல் டிஜிட்டல் முறையில் PLC யின் ஒரு சேனலை Drop செய்துவிட்டு இன்னொரு சேனலை சேர்க்க இயலாது.

9. PLC சேனல்கள் எவ்வளவு எண்ணிக்கையில் இருந்தாலும், இந்நிறுவனம் தெரிவிக்கின்ற இடத்தில் மட்டுமே சேர்க்க முடியும்.

10. PLC சேனலில் ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகளுக்கு PLC உரிமையாளர்களே பொறுப்பாவார்கள். எனவே, மத்திய அரசின் தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் வரையருத்துள்ள விதிகளுக்கேற்றவாறு நிகழ்ச்சிகள் இருக்க வேண்டும்.

11. அனைத்து PLC சேனல்களும் SCRAMBLE செய்யப்பட்டு இந்நிறுவனத்தின் வலையமைப்பு மூலம் அனுப்பப்படும்.

**கீழ்காணும் குறிப்புகளுக்கு PLC உரிமையாளர்கள் தங்களின் கருத்துக்களை தெரிவிக்கலாம்**

1. தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் தெரிவிக்கும் BSNL / RAILTEL DROP DROP இடத்திற்கு அப்பகுதியின் அனைத்து PLC சேனல்களையும் ஒருங்கிணைத்து வழங்குவதற்கான திட்டத்தினை தெரிவிக்கவும்.

2. PLC உரிமையாளர்களிடம் நேரடி ஒளிபரப்பு மற்றும் பதிவு செய்த வீடியோக்களை ஒருங்கிணைந்து வழங்கும் அமைப்பு உள்ளதா?

3. ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள அனைத்து PLC சேனல்களையும் ஒருங்கிணைத்து அனுப்புவதற்கு தேர்வு செய்துள்ள இடத்தை குறிப்பிடவும்.

4. ஒன்று அல்லது இரண்டு PLC சேனல்கள் மட்டுமே உள்ள பகுதிகளிலிருந்து இந்நிறுவனம் தெரிவிக்கும் Drop -க்கு எவ்வாறு சிக்னல் கொண்டுவரப்படும்?

5. தற்பொழுது DROP Dropper மூலமாக சேனலை நீக்கிவிட்டு, புது சேனல்களை புகுத்துபவர்கள், Fibre Cable மூலமாக சேனல்களை அருகில் உள்ள BSNL / RAILTEL Drop உள்ள இடத்திற்கு எடுத்து செல்ல வசதி உள்ளதா? என்பதை தெரிவிக்கவும்.